NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 3 June 2021

# ஆசிய தரவரிசையில் முன்னணி இடத்தில் சிங்கப்பூரின் இரண்டு பல்கலைக்கழகங்கள்

ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகங்கள் பட்டியலில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) மூன்றாவது இடத்திலும்; நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (என்டியு) ஐந்தாவது இடத்திலும் வந்துள்ளன.

‘டைம்ஸ் உயர் கல்வி’யின் அண்மைய தரவரிசையில் சிங்குவா, பீக்கிங் பல்கலைக்கழகங்கள் முறையே முதல், இரண்டாவது இடங்களைப் பிடித்தன. ஹாங்காங் பல்கலைக்கழகம் நான்காவது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது.

2020ல் ஆறாவது இடத்திலிருந்த என்டியு ஐந்தாவது இடத்துக்கு வந்தது, என்யுஎஸ் முதல் மூன்று இடங்களில் தொடர்ந்து உள்ளது. இரு பல்கலைக்கழகங்களும் சென்ற 2015ஆம் ஆண்டிலிருந்து முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்று வருகின்றன.

ஆறாவது இடத்தில் தோக்கியோ பல்கலைக்கழகம், ஒன்பதாவது இடத்தில் சோல் தேசிய பல்கலைக்கழகம் 10வது இடத்தில் கியோட்டோ பல்கலைக்கழகம் ஆகியவை உள்ளன. நேற்று வெளியிடப்பட்ட இந்த ஆண்டின் தரவரிசையில் 30 நாடுகளையும் வட்டாரங்களையும் சேர்ந்த 551 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன. 2020இல் தரவரிசைப்படுத்தப்பட்ட 489 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றன.

கற்பித்தல் (கற்றல் சூழல்), ஆய்வு (அளவு, வருமானம், மதிப்பு), மேற்கோள்கள் (ஆய்வு பாதிப்பு), அனைத்துலக பார்வை (ஊழியர்கள், மாணவர்கள், ஆய்வு), தொழில்துறை வருமானம் (அறிவு பரிமாற்றம்) ஆகிய ஐந்து பிரிவுகளாகத் தொகுக்கப்பட்ட 13 செயல்திறன் குறிகாட்டிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களை ‘டைம்ஸ் உயர் கல்வி’ மதிப்பீடு செய்தது.

பங்கேற்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை கூடிவருவது இந்த வட்டாரத்தில் வளர்ந்து வரும் போட்டித்தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்றார் ‘டைம்ஸ் உயர் கல்வி’ பதிப்பின் தலைமை அறிவு அதிகாரி திரு பில் பாட்டி.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.